21st October 1971]

*5. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the admissions made to the Medical Colleges in Tamil Nadu were set aside by the Supreme Court during January, 1971; and

(b) if so, the reason therefor?

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் பட்டியலை தலைமை உயர்நீதி மன்றம் 1971 ஜனவரித் திங்களில் ரத்து செய்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விதிகளில் சொல்லியுள்ளபடியும், 23—9—1970 நாளிட்ட தனது தீர்ப்பில் காணும் குறிப்புகளுக்கிணங்கவும், தேர்வுக்குழு மதிப்பெண்கள் அளிக்கவில்லை என்று தலைமை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

Post of Lay Secretary.

*6. Q.—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any discrimination shown between the clerks who work at the Head-Quarters Office and others while considering them for promotion to the post of Lay Secretary; and

(b) if so, the steps taken by the Government to rectify the same?

லே செகாட்டரி பதவி.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மருத்துவத் துறையில் பணிபுரியும் எழுத்தர்களுக்கு லே செகாட்டரி பதவி உயர்வு கொடுப்பதில் தலைமை அலுவலகத்தில் உள்ளவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பாகுபாடு ஏதாவது இருக்கின்றதா?

(இ) ஆம் என்ருல், அதைப்போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) "லே செகாட்டரி" பதவி விதிமுறைகளின்படி மருத்துவத் துறை தலைமை அலுவலகங்களிலுள்ள மேற்பார்வையாளர்களும், (வேறு அலுவலகங்களில் உள்ள 10 வருடங்களுக்கு குறையாமல் பணியாற்றிய எழுத்தர்களும் அதற்கும் மேலான அரசிதழ் பதிவு பெருத பதவியிலுள்ளவர்களும், லே செகாட்டரி இரண்டாவது கிரேட் பதவி உயர்வுக்குத் தகுதி உள்ளவர்களாவார்கள்.

(இ) மருத்துவத்துறை தலைமை அலுவலகங்கள் தவிர வேறு அலுவலகங்களில் பெரும்பாலும் மேற்பார்வையாளர்கள் இல்லாமையாலும் அங்குள்ள அனுபவம் உள்ள எழுத்தர்களுக்கும் அதற்கும் மேலான அரசிதழ் பதவி